**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்**
**அ.வ.எண். 48/2020**

பெயர் : முத்துவேல் ராஜ்
சாட்சி – வா.சா–1 நாள்: 25.11.2025

---

1ம் பிரதிவாதி அவருக்காக அவரே இந்த வழக்கில் முன்னிலையாகி வந்துள்ளார். அவருக்கு இந்நீதிமன்றம் வழக்கறிஞர் வைத்து கொள்வதற்கு போதிய வசதி வாய்ப்புகள் இல்லை என்றால் இலவச சட்ட உதவி மையத்தின் மூலமாக வழக்கறிஞர் வைத்துக்கொள்ளலாம் என்ற வசதியை விளக்கிய பின்னரும், தனக்கு நீதிமன்ற வழக்குகளில் வழக்கு நடத்திய அனுபவம் உள்ளது என்றும், தானே குறுக்கு விசாரணை செய்வதாகவும், தெரிவித்ததால், சாட்சியை 1ம் பிரதிவாதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பு)**

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரோட்டை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால் தாக்கல் செய்துள்ளோம். வாதியாக இருந்த 4ம் பிரதிவாதியாக பின்பு மாற்றம் செய்யப்பட்ட தங்கராஜ் என்பவருக்கு ஏன் வழக்கு நடத்த தற்போது விருப்பம் இல்லை என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லை. அவரால் நீதிமன்றத்திற்கு வர முடியாது என்பதால் அவருக்கு விருப்பம் இல்லை. தங்ராஜிற்கு வாதியாக இருக்க விருப்பம் இல்லை என்றும், நாங்கள் தான் அவரை கட்டாயப்படுத்தி வழக்கில் ஒரு வாதியாக முன்பு சேர்த்திருந்தோம் என்றால் சரியல்ல.

2. நான் வழக்கில் சொல்லியுள்ள பாதை உரிமை எனக்கு எவ்வாறு வந்தது என்றால் மனைப்பிரிவாக பிரிக்கப்பட்ட மனைப்பிரிவிற்கு அது சாலையாக காண்பிக்கப்பட்டுள்ளது. நான் அந்த மனையை கடந்த 2016ம் ஆண்டில் வாங்கினேன். நான் யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் மனைப்பிரிவு ஏற்படுத்தியவர்களின் முகவர் விஜயகுமார் என்பவர் மூலமாக வாங்கினேன். கிரையம் பெற்ற பின்பு பிரச்சனை 2020ம் ஆண்டில் தான் வந்தது. பிரச்சனையை மனைப்பிரிவு ஏற்படுத்தியவரிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். அதற்கு அவர்கள் DTCP அனுமதி அளிக்கப்பட்ட மனைப்பிரிவு என்றும், மனைப்பிரிவை ஏற்படுத்தும் போது யாரும் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்தார்கள்.

3. நான் மனைப்பிரிவு ஏற்படுத்தியவர்களிடம் அனுகிய போது அவர்கள் தீர்விற்கு ஏதேனும் முயற்சித்தார்களா என்றால் அவர்கள் மனைப்பிரிவு விற்பனை செய்யப்பட்டுவிட்டது பிரச்சனையை நீங்கள் தீர்த்துக்கொள்ளுங்கள், வரவேண்டிய கட்டாயம் இருந்தார் அவர்கள் வந்து தீர்ப்பதாக உறுதி அளித்தார்கள். மனைப்பிரிவை ஏற்படுத்தியவர்கள் நேரில் வந்து மனையிடங்களை பார்த்தார்களான என்றால் இல்லை. வேறு யாரும் பிரச்சனை சம்மந்தமாக மத்தியஸ்தம் பேசினார்களா என்றால் வேறு யாரும் பேச வில்லை. சாட்சி குறுக்கு விசாரணை செய்யும் 1ம் பிரதிவாதியை பார்த்து நீங்கள் மட்டும் தான் 6 லட்சம் பெற்றுக்கொண்டு பிரச்சனையை முடித்து கொடுங்கள் என்று சொன்னீர்கள் என்று சொல்கிறார்.

4. நான் மனையிடங்களை வாங்கும் போது சம்மந்தப்பட்ட ஆவணங்களை சரிபார்த்து தான் வாங்கினேன். க.ச.843 காலையில் மொத்தம் 36 மனையிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன அவற்றை முதல் மனை என்னுடையதாகும். 3 பக்கமும் சாலை உள்ளது என்பதால் தான் நான் அதனை வாங்கினேன். என்னென்ன ஆவணங்களை பார்த்தேன் என்றால் சொத்தின் முந்தை உரிமையாளர் வங்கியில் வைத்த அடமான கடன் பத்திரம், அவரது தந்தையின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ், வில்லங்க சான்றிதழ் மற்றும் DTCP அனுமதி வரைபடம் ஆகியவற்றையும் பார்த்தேன்.

5. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. சாட்சி குறுக்கு விசாரணை செய்யும் 1ம் பிரதிவாதியை பார்த்து நீங்கள் தான் எனக்கு அறிவிப்பின் மேல் அறிவிப்பு கொடுத்து எனக்கு மன உலைச்சல் ஏற்படுத்துகிறீர்கள் என்று சொல்கிறார். 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்வதாக சொல்லும் பாதை க.ச.842 காலையில் உள்ளது. நான் வழக்கில் க.ச.847 பாதையை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்வதாக முயற்சி செய்வதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். க.ச.847 புல எண் என்பது தான் சரியானதாகும்.

6. க.ச.847 பாதையானது பொது தடம் ஆகும். அதற்கு அரசு தார் சாலை அமைத்துள்ளது. அந்த தார் சாலையை யார் எந்த வருடம் அமைத்தார்கள் என்றால் நான் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே தார் சாலை போடப்பட்டிருந்து தற்போது அரசு

புதிதாக தார் சாலையையும் அமைத்துள்ளது. கடந்த 2019ம் ஆண்டு வரை க.ச.847 காலையில் எந்த ஒரு தார் சாலையும் பேரூராட்சி நிர்வாகத்தால் அமைக்கபடவில்லை என்று 1ம் பிரதிவாதிக்கு பதில் அளிக்க வில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. மற்றவர்களுக்கு எந்த இடையூறும் இல்லாத போது வாதிகளுக்கு மட்டும் இடையூறு செய்வதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு இடையூறு செய்கிறார் மற்றவர்களை மிரட்டுவதால் யாரும் வருவதில்லை. மனைப்பிரிவு ஏற்படுத்தியவர்கள் க.ச.862 காலையின் எல்லை கற்களை அகற்றி உள்ளவிவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் மனை வாங்குவதற்கு முன்பாக ஊர் பொது மக்கள் க.ச.847 காலை பாதையை ஆக்கிரமிப்பு செய்ய கூடாது என்று கூறி சாமளாபுரம் பேரூராட்சி மற்றும் கிராம நிர்வாக அலுவகம் முன்பாக போராட்டம் நடத்தினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. 4ம் பிரதிவாதியான தங்கராஜ் க.ச.847 காலை பாதையை பயன்படுத்தி வருகிறார் என்றால் அது பொது சாலை யார்வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். நான் அனுப்பியதாக சொல்லும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த அறிவிப்பு நகல் என்னிடம் உள்ளதா என்றால் தற்போது என்னிடம் இல்லை. அந்த அறிவிப்பு எந்த வருடம் அனுப்பப்பட்டது என்றால் எனக்கு நினைவில் இல்லை.

9. க.ச.847 காலை பொதுத்தடத்தின் அகலம் 42 அடி என்று எனது நிரூபன வாக்குமூலத்தின் பத்தி 8ல் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனது கிரைய ஆவணத்தில் மேற்படி சாலையின் அகலம் 32 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 32 அடி சாலையினை ஒட்டி மேல்புறம் எனது மனை உள்ளது என்றால் 5 அடி அகலத்தில் கழிவுநீர் வாய்க்கால் சாலையை ஒட்டி விடப்பட்டுள்ளது. அதற்கு அடுத்து தான் எனது மனை உள்ளது.

10. 5 அடி கழிவு நீர் வாய்க்கால் 32 அடி பாதைக்குள் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி பாதைக்க மேல்புறம் தான் கழிவுநீர் வாய்க்கால் தனியாக உள்ளது. மூல ஆவணங்கள் எதிலாவது க.ச.847 காலையின் 42 அடி அகலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வருவாய் துறை ஆவணங்கள் எதிலாவது 42

அடி அகலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் இந்த வழக்கில் DTCP அனுமதி வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், நான் எந்த அனுமதி வரைபடத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. எனது கிரைய ஆவணத்தில் 32 அடி அகல சாலை என்று குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுத்துள்ள போது மேற்படி ஆவணத்திற்கு முரணாக நான் எனது வழக்குரை சொத்து விவரத்தில் பி அட்டவணையில் 42 அடி என்று குறிப்பிடுவதற்கு எந்த உரிமையும் எனக்கு கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சமூக ஆர்வலர் என்ற போர்வையில் பொது சாலையை ஆக்கிரமிக்க முயற்சி செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சமூக ஆர்வலர் என்று என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் 1ம் பிரதிவாதி தான் சொல்லி வருகிறார்.

12. வருவாய் துறை அதிகாரிகள் சாலையை அளக்க முயற்சி செய்த போது 1ம் பிரதிவாதி தடுப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாதையை அளப்பதற்கு நான் முயற்சி எடுத்தேன் என்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நில அளவையர் வந்த போது பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13. 1ம் பிரதிவாதி தடுத்தார் என்பதற்காக அவர் மீது புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எத்தனை முறை அளவீடு செய்யவந்தார்கள் என்று எனக்கு நினைவில் இல்லை. க.ச.847 சாலையை நானும், 4ம் வாதியும் ஆக்கிரமித்துள்ளதாகவும், அதனை அகற்ற வேண்டும் என்றும், சாமளாபுரம் பேரூராட்சி எங்களுக்கு அறிவிப்பு அனுப்பியது என்றால் எங்கள் வீட்டில் கார் ஏற்றுவதற்காக சருக்கலாக சற்று சாலையில் இருந்து பாதை அமைக்கப்பட்டிருந்து அறிவிப்பு கொடுத்தவுடன் அகற்றி விட்டோம்.

14. க.ச.845, 847, 862 ஆகிய காலைகளை வருவாய் துறை அதிகாரிகள் மூலம் அளந்து கல் நடுவதற்கு எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால்

எல்லாருடைய பூமியையும் அளப்பதாக இருந்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆக்கிரமிப்பு சம்மந்தமாக ஏதேனும் புகார் அளிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 04.12.2019 தேதியில் நானும், தங்கராஜ் மற்றும் சிலர் சேர்ந்து புகார் அளித்துள்ளோம் என்றால் நான் 2020ம் ஆண்டில் தான் வழக்கு தாக்கல் செய்தேன். அதற்கு முன்பு மற்றவர்கள் அளித்துள்ள புகார் குறித்து எனக்கு தெரியாது.

15. 05.12.2019 தேதியில் சாமளாபுரம் பேரூராட்சிக்கு ஆக்கிரமிப்பு சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.25 18:29:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.